**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 5, Issue - 2, May 2026** **E-ISSN: 2583-0481**
**MLA, DOAJ Indexed**

# Customs and culture of Kongu Vellar

**D. Divya,** Research Scholar of Tamil, Reg.No: 20PHTMP002, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2648-6710**
**Dr. T. Nagammal,** Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0001-5677-2267**
**DOI: 10.5281/zenodo.20473739**
**Received:** 18 December 2025; **Revised:** 28 February 2026; **Accepted:** 17 March 2026; **Available Online:** 31 May 2026

## Abstract

*Ancient Tamil literature dating back over 2,000 years praises the Kongu Vellalars, referring to them as "Vel" and "Velir." The Kongu Vellalars take pride in associating themselves with the term "Velanmai," which denotes benevolence and service to others, and in naming their region "Kongu Nadu" by combining this concept with the name of their land. Traditionally, the Vellalars possessed the right to crown kings and to grant endowments or gifts. They were known for their protective nature, safeguarding people, land, and cattle. Because of this quality, they were referred to as "Kamiṇḍar" by other communities. Over time, this term evolved into "Gounder," a title that continues to be in use today. Compared to other communities, the Kongu Vellalars maintain distinct customs, rituals, and social practices, many of which are still followed today, as evidenced by field studies. They are known for their strong sense of kinship and for leading lives rooted in love and virtue. They preserve and honor their lineage and clan deities, passing these traditions on to the younger generation. Despite significant advancements in medicine, science, and technology, field research indicates that a primary focus of the Kongu Vellalars remains the preservation and transmission of their ancestral customs, culture, and beliefs to future generations.*

**Keywords:** Kongu Vellalar, Lifestyle, Customs, Beliefs.

## References

[1] Arumbu, Ma. "Pachchai Malai Malayaali Makkalil Vaazhviyal Sadangugal." *Puthiya Avaiyam*, Thoguthi 07, Jeen 2023, pa. 1043.
[2] Rajeshwari, K.P. "Tholkappiyam Koorum Thozhilgal." *Annaattu Aayvkku Karutharangam*, Thoguthi 1, 2019, pa. 560.
[3] Rajeshwari, Se. "Nattuppura Oppaari Paadalkal Kaattum Penngalin Avala Nilai." *Puthiya Avaiyam*, Thoguthi 07, Jeen 2023, pa. 1001.
[4] Thuraisamippillai, Oavai Su. Purananooru - Paguthi 1. Saiva Siddhantha Noorpathippu Kazhagam, 1947.
[5] Shanmugasundaranar, Su. *Nattuppura Iyal*. Kavya Pathippagam, 1975.
[6] Chinnasami Kaundar, Kaviaruvi, The.Pa *Kongu Velala Kaundargalin Varalrum Panpaadum*. Sree Saraswathi Devi Pathippagam, 2000.
[7] Subramanian, Sa.Ve. *Tholkappiyam Muzhudhum*. Meyyappan Pathippagam, 2008.
[8] Thevaneyap Paavanar, Gna. *Thirukkural Muzhudhum*. Sree Hindu Publications, 2000.
[9] Nallathanar. *Thrigadum*. Suraatha Pathippagam, 2005.
[10] Pavithra, Si. "Sool Pudhitham Eduthiyambum Nattaar Nambikkaigal." *Desiya Karutharangam Aayvkkovai*, Thoguthi 4, April 2023, p. 189.

[11] Vengadasamy, Mayilai Seeni. *Konga Nattu Varalaru*. New Century Book House, 2014.
[12] Yasotha, Se. "Kongu Velala Pannaikula Makkalin Nambikkaigal." *Navina Thamizhaayvu*, Paguthi-4, March 2021, pa. 1095.
[13] Velusamy, Su. Nerkanal. 20 March 2025.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057
இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

# கொங்கு வேளாளரின் பழக்கவழக்கங்களும் பண்பாடும்

**த. திவ்யா,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 20PHTMP002, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-2648-6710**
**முனைவர் த. நாகம்மாள்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்,தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0001-5677-2267**

**ஆய்வு சுருக்கம்**

*வேள் என்றும் வேளீர் என்றும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் கொங்கு வேளாளர்களை சிறப்பித்துப் பாடுகிறது. கொங்கு வேளாளர்கள் உபகாரம் மற்றும் பிறருக்கு உதவுதல் என்று பொருள்படும் வேளாண்மை என்னும் சொல்லினை தங்களது நாட்டின் ஒரு பகுதியான கொங்கு என்னும் பெயருக்கு பின் வேளாளர் என்னும் பெயரை இணைத்துக் கொண்டு கொங்கு வேளாளர் என அழைக்கப்படுவதில் இன்றுவரை பெருமிதம் கொள்கின்றனர். அரசர்களுக்கு முடிசூட்டுவதற்கும் மற்றும் மகற்க்கொடை அளிப்பதற்கும் உரிமை படைத்தவர்கள் வேளாண்மை ஆவர். இவ்வினத்தார் மக்கள், நாடு, கால்நடை என அனைத்தையும் பாதுகாக்கும் தன்மை உடையவராய் விளங்குவதால் இவர்களை காமிண்டார் என்று பிற இனத்தவர்கள் அழைத்தனர். நாளடைவில் காமிண்டர் என்ற பெயர் மருவி கவுண்டர் என்றானது இப்பெயர் இன்றுவரை வழக்கத்தில் இருந்து வருகிறது. கொங்கு வேளாளர் பிற இனத்தாவர்களை விட சற்று வேறுபட்டு பழக்கவழக்கங்கள் சடங்குமுறைகள் வாழ்வில் நடைமுறைகளை இன்று வரை கடைபிடித்து வருகின்றனர் என்று கள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. சுற்றம் தழுவியவர்கள். அன்பையும் அரணையும் வாழ்வாக கொண்டு வாழ்பவர்கள் குலத்தையும் குலதெய்வத்தையும் பேணி காத்து அடுத்து வரும் இளைய தலைமுறை தங்களது மரபு கொண்டு செல்கின்றனர். இன்றளவில் மருத்துவம், அறிவியல், தொழில் நுட்பங்கள் ஆகிய முன்னேற்றங்கள் வளர்ந்திருப்பினும் தம் முன்னோர்கள் வகுத்தளித்த பழக்கவழக்கங்கள், பண்பாடு, நம்பிக்கை ஆகியவற்றை இன்றைய இளைய தலைமுறையிருக்கு கொண்டு செல்வதே முதன்மை காரணமாகும் என்பதை களஆய்வின் மூலம் அறிய முடிகிறது.*

**குறிப்புச்சொற்கள்:**கொங்குவேளாளர் வாழ்வியல், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள்.

**முன்னுரை**

பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் கொண்ட அனுபவத்திற்கும் மற்றும் அறிவிற்கும் ஒரு உதாரணமாக இவ்வினத்தார் திகழ்கின்றனர் எனலாம் பெரும்பான்மையான சடங்கு முறைகளை அறிமுகப்படுத்தியவர்கள் இவ்வினத்தார் ஆவர். சடங்கு முறைகள் மனிதனின் வாழ்வினை ஒழுங்குப்படுத்தி பாதுகாத்து வாழ்வை செம்மைப்படுத்துவதாக இவ்வினத்தார் இன்று வரை நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். நல்லநாள் பார்த்தல், குறி கேட்டல், தீய சகுனத்திற்கும், இறப்பு

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

நிகழ்விற்கும் பரிகாரங்கள் செய்தல் உறவினர்களிடம் உரிமை மற்றும் மரியாதையை பேணிக்காத்தல் போன்ற பண்புகளை முதன்மை பண்பாக கொண்டுள்ளனர். அந்தணர் அல்லாத சடங்கு முறைகளையே கொங்கு வேளாளர்கள் ஏற்றனர். கொங்கு வேளாளர் தங்கள் இனத்திற்குள் பண்டமாற்று முறையில் பொருளீட்டி உதவி செய்து கொள்வதோடு ஏழை எளிய மக்களுக்கும், நாடி வந்தவர்களுக்கும் இல்லை என்று கூறாமல் உதவும் மனப்பாங்கு உடையவர்கள் ஆவர். கொங்கு வேளாளர்கள் பிறப்பு தொடங்கி இறப்பு வரை தங்களது ஒழுக்க பண்பாட்டில் சிறந்து விளங்கி இருந்தனர் என்பதை கள ஆய்வு மற்றும் சில நாட்டுப்புறவியல் அறிஞர்கள் மற்றும் கள ஆய்வு அறிஞர்களாலும் அறிய முடிகிறது.

**கொங்கு வேளாளர் வரலாறு**

கொங்கு வேளாளர் கவுண்டர் இன மக்களை பற்றி பலரும் கட்டுக்கதைகளையும் கதாபாத்திரங்களையும் உருவாக்கி இவர்கள்தான் கொங்கு வேளாளர்கள் என உருவாக்கி விட்டனர். சிலரது நேர்காணல் மற்றும் கள ஆய்வுகளாலும், வரலாற்று செய்திகளாலும் உண்மையான வரலாற்றினை இன்றைய காலகட்டத்தை சேர்ந்த கொங்கு வேளாளர்கள் அறிந்து வைத்துள்ளனர். தேவர் உலகத்தில் இருந்து கங்கையில் மைந்தனாகப் பிறந்து காஞ்சிபுரத்தில் குடியேறி தஞ்சாவூர் சென்று பூந்துறை நாட்டில் புகுந்தவர்கள் கொங்கு வேளாளர்கள் என வரலாறு கூறுகிறது. கொங்கு நாட்டின் முதல் குடிமக்களாக பிறந்தவர்கள் கொங்கு வேளாளர்கள் தாம். கொங்கு வேளாளர்களின் குடிஇயல், வாழ்வியல், வரலாற்று உண்மைகள், உழைப்பு, அறிவியல், பண்பாடு மருத்துவம் போன்ற அனைத்திலும் இவ்வின மக்கள் சிறந்து விளங்குகின்றனர். இலக்கணம் மற்றும் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகள் மேற்கொண்டு இவ்வினத்தார் தங்களது வரலாற்றினை பதிவு செய்து வைத்துள்ளனர். வட ஆற்காட்டில் தோன்றி தஞ்சாவூரில் வாழ்ந்த கொங்கு வேளாளர்கள் சோழன் சேரனுக்குப் பெண் கொடுத்தன். அந்தப் பெண்ணிற்கு சீதனமாக நாற்பதாயிரம் வேளாளர்களை கொங்கு நாட்டில் குடியேற்றினான். சீதனமாக வந்து குடியேறிய மக்களே கொங்கு வேளாளர் கவுண்டர்கள் என்று எழுதியுள்ளனர் செய்தியானது செவிவழி செய்தியாகவே காணப்படுகிறது.

**கொங்கு வேளாளக் கவுண்டர்களின் சிறப்புகள்**

தொல்காப்பிய முதல் வேளாளர் புராணம் வரை கொங்கு வேளாளர் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

**பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல் (குறள் - 505)**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப கொங்கு வேளாளர்களின் செயல்கள், சடங்குகள், வழிபாடுகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், உணவு, உடை, இருப்பிடம், திருமணம், இறப்பு என்று பலதரப்பட்ட பெருமைகளை எடுத்து கூறும் அளவிற்கு சிறந்த பண்புகளை கொண்டவர்களாக விளங்குகின்றனர். “**வேளாண் என்பான் விருந்திருக்க உண்ணாதான் என” (திரிகடுகம், ப. 12)** கூறுகிறது. “**உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்றார் வள்ளுவர்” (குறள் - 1032)** இதுபோன்றே சங்க நூல்கள் மட்டுமின்றி திருக்கோவலூர் கல்வெட்டும் வேளாளர் சிறப்பினை கூறுகிறது.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

**உழவுத் தொழில் உயிர் காக்கும் தொழிலாக போற்றப்பட்டது. அத்தொழிலுக்கு அடித்தளமாய் விளங்குவது நிலமும் நீரும். இவற்றின் இயையே உணவுப் பொருட்களின் ஆக்கமாகும். (கை. ப. இராஜேஸ்வரி, ப. 560)**

கொங்கு வேளாளர் கவுண்டர்களின் மக்கள் தொகை திருப்பூர் மாவட்டத்தில் மட்டுமே பல்லடம், தாராபுரம், அவிநாசி, பழங்கரை, 15 வேலம்பாளையம், அங்கேரிபாளையம் போன்ற பகுதிகளில் கொங்கு வேளாளர்கள் வாழ்ந்து வருகின்றனர் கொங்கு வேளாளர்கள். 24 நாட்டின் கொங்கு நாட்டார் பிரிவுகளின் கீழ் காணியர்கள் உள்ளது ஒவ்வொரு காணியர்ளும் தங்களுக்குள்ளே 36 தலைவர்கள் கொண்ட குழவின் கீழ் 56 என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் குடும்பங்கள் வாழுகின்றன.

**திருப்பூர் மாவட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மூன்று சதவீத மக்கள் கொங்கு வேளாளர்கள் இனத்தைச் சார்ந்தவராகவே காணப்படுகின்றனர் திருப்பூர் மாவட்டத்தில் நெசவு மட்டும் இன்றி வேளாண்மையையும் காணப்படுவதால் கொங்கு வேளாளர்கள் அதிகப்படியாக நிலங்கள் சார்ந்த பகுதியில் வாழுகின்றனர் என மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் அறிய முடிகிறது அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்தம் கொங்கு வேளாளர்கள் 3.2சதவீதம் உள்ளதாக பதிவுகள் கிடைத்துள்ளன. திருப்பூர் மாவட்டம் மட்டுமின்றி பிற மாவட்டங்களிலும் கொங்கு வேளாளர்கள் வசித்து வருகின்றனர். (கள ஆய்வு - திருப்பூர் மாநகராட்சி)**

கொங்கு வேளாளக் கவுண்டர் இன மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பழக்கவழக்கங்கள் கள ஆய்வின் மூலம் ஆராயப்பட்டுள்ளது. பிறப்பு, பூப்பு, திருமணம், பேறு காலம், இறப்பு என பிறப்பு முதல் இறப்பு வரையிலான பழக்கவழக்கங்கள் என வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கங்களையும் காணலாம்.

**பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள பழக்கவழக்கங்கள்**

கொங்கு வேளாளர் மக்கள் தங்கள் வாழ்நாளின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து பழக்க வழக்கங்களிலும் தங்களின் தனித்துவத்தினை சமுதாயத்திற்கு தெரியப்படுத்துகின்றனர்.

**நாடு, இனம், மதம் இவைகளின் தோன்றுவதற்கு முன்னதாகவே பழக்கவழக்கங்கள் தோன்றி வளர்ச்சிக்கு பெற்றதை வாழ்ந்து வந்த மக்கள் வகைவகையாக வகுத்து வழக்கங்களும் நம்பிக்கைகளும் ஒவ்வொரு நாட்டிலும் வேரூன்றி கிடைப்பதாகும். என்று சண்முகசுந்தரத்தின் இக்கூற்றானது பழக்கவழக்கங்களின் தொன்மையின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது. (நாட்டுப்புறவியல், ப. 21)**

மற்ற இன மக்களை விட கொங்கு வேளாளர்களின் பழக்கவழக்கமானது சற்று வேறுபாடாகவே காணப்படுகிறது. சங்க காலம் இடைக்காலம் தற்காலம் என அனைத்து காலம் மாறுபாட்டிலும் பல்வேறு வளர்ச்சிகள் ஏற்படினும் இவ்வினத்தார் பழக்கவழக்கங்களில் எவ்வித மாறுபாடும் ஏற்படவில்லை. இவ்வினத்தார் பழக்கவழக்கங்கள் மற்ற இனத்தை விட வேறுபாடு உடையதாக இருப்பினும் மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பொதுவான முறையாகவே முன்னோர்களால் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

**பழக்கவழக்கங்களின் வகைகள்**

கொங்கு வேளாளர் இன மக்கள் தங்களது பழக்கவழக்கங்களுக்கு கீழ் சமூக வாழ்வினையும் தனிமனித வாழ்வினையும் செம்மையாக நடத்தி வந்தனர். பழக்கவழக்கங்களின் ஆரம்பமாக திகழ்வது பிறப்பாகும். ஒரு மனிதனின் வாழ்வில் பிறப்பும் இறப்பும் பொதுவானதாக இருப்பினும் அவன் வாழ்வதற்கும் வாழ்ந்த அடையாளங்களுக்கும் ஒரு உயர்பினை தருவது அவரவர் இனம் சார்ந்த பழக்கவழக்கங்களை ஆகும் என இவ்வினத்தார் நம்புகின்றனர்.

- **பிறப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள்**
- **பூப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள்**
- **எழுதிங்கு சீர்**
- **திருமணம் சார்ந்த பழக்கவழக்கங்கள்**
- **குழந்தை வளர்ப்பு**
- **இறப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள் பிறப்பு சார்ந்த பழக்கவழக்கம்**

திருப்பூர் மாவட்ட கொங்கு வேளாளர் இன மக்களின் பிறப்பு சார்ந்த சில பழக்கவழக்கங்களை பின்பற்றுவதன் மூலம் தங்களது தலைமுறையானது சிறந்த தலைமுறையாக தொடங்குகிறது என்று பழக்கவழக்கங்களின் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். நாகரீக வளர்ச்சியினால் சில பழக்கவழக்கங்கள் அழிந்து வந்தாலும் கூட குழந்தை பிறப்பதற்கு முன் குழந்தை பெறுவதற்கு பின் என இரு வகையாக பிரித்துள்ளனர்.

**பிறப்பு**

- **குழந்தை பிறப்பதற்கு முன்**
- **குழந்தை பிறப்பதற்கு பின் குழந்தை பிறப்பதற்கு முன்**

ஒரு பெண் திருமணமாகி மூன்று மாதத்திற்கு பின் ஒரு ஆண்டிற்குள் கருத்தரித்தல் வேண்டும். கருத்தரிக்காது விட்டால் தங்களது குல தெய்வத்திற்கு பரிகாரங்கள் செய்து வேண்டிக் கொள்கின்றனர்.

> **வேண்டுதல் நிறைவேறி குழந்தைப் பேறு கிடைத்தால் தொட்டில் கட்டிப் போடுவதாக வேண்டிக் கொள்கின்றனர். குழந்தை பேறு வேண்டுவோர் முதலில் கோயிலிலுள்ள மரத்தில் ஒரு சிறு வெள்ளைத் துணியில் தொட்டில் கட்டி தொங்க விடுகின்றனர். தொங்குகின்ற தொட்டிலில் ஒரு சிறு கல்லைக் குழந்தையாக எண்ணிப் போட்டு ஆட்டுகின்றனர். (செ.யசோதா, ப. 1095)**

என்ற கட்டுரை சான்றின் வழி கொங்கு வேளாளர்கள் குழந்தை பிறக்க சில நம்பிக்கைகளை பின்பற்றியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**வளைகாப்பு**

கருவுற்ற பெண்ணை தாய் வீட்டார் மூன்று ஏழு ஒன்பது போன்ற ஒற்றைப்படை எண் கொண்ட மாதத்தில் புகுந்த வீட்டில் வைத்து வளைகாப்பு செய்கின்றனர். வளைகாப்பு முடிந்த பின் தமிழர்களின் வழக்கப்படி அனைத்து இனத்தினர் போலவே கொங்கு வேளாளர்களும் கருவுற்ற பெண்ணை தாய் வீட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். வளைகாப்பு முடிந்து குழந்தை பிறக்கும் வரை தாய் அல்லது வீட்டிலேயே இருக்கிறாள் கருவுற்ற பெண்ணிற்கு தன் தாயிடம் கிடைக்கும் அரவணைப்பானது வந்து சேரும் என்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில் தாய் வீட்டிற்கு அனுப்பும் வழக்கத்தினை முன்னோர்கள் பின்பற்றுகின்றனர்.

**தாய் சேய் சார்ந்த பழக்கவழக்கங்கள்**

கருவுற்ற பெண்ணின் வீட்டில் கொடி சார்ந்த தாவரங்கள் அதாவது வெற்றிலை கொடி முல்லைக்கொடி என கொடி சார்ந்த செடிகள் நன்கு வளர்ந்தது என்றால் பெண் குழந்தை தான் பிறக்கும் என்ற நம்பிக்கையான நம்பிக்கையினை கொண்டு இருக்கின்றனர். பிறக்கப் போவது எந்த குழந்தை என அறிவதற்காக கருவுற்ற பெண் இருக்கும் வீடுகளில் விண்ணத்தார் கொடி வகை சார்ந்த செடிகளை வளர்க்கும் பழக்கத்தினை வளர்த்துக் கொண்டனர் பெண் குழந்தைகள் பிறந்தால் பெரும் பாவம் என நினைக்கும் இச்சமுதாயத்தில் பெண் பிள்ளைகளை இவ்வினத்தார் பெரும் வரமாக எண்ணுவதாகக் கூறுகின்றனர்.

> **குழந்தைகள் நள்ளிரவு அல்லது நடுப்பகுளில் பிறக்க கூடாது என்றும் அவ்வாறு பிறந்தால் உடன் பிறந்தவர்களின் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை கொண்டிருந்தனர். நள்ளிரவில் குழந்தை பிறந்தவுடன் சூடேற்றிய விளக்கினை இணைத்து குழந்தையை குளிக்க வைக்கும் பழக்கத்தினை கொண்டுள்ளனர் அவ்வாறு செய்வதால் குழந்தையின் ஆயுள் கூடுவதாகவும் குழந்தைகள் சார்ந்தவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்றும் இது இவ்வினத்தார் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கங்களை பின்பற்றுகின்றனர். (தகவலாளர் - சு. வேலுசாமி, பல்லடம், வயது-63)**

கருவுற்ற பெண் இடது பக்கம் படுத்து உறங்கினால் ஆண் குழந்தை பிறக்கும் என்றும் வலது பக்கம் படுத்து உறங்கினால் பெண் குழந்தை பிறக்கும் என்று ஒரு நம்பிக்கை நிலவுவதால் தங்களுக்கு எந்த குழந்தை வேண்டுமோ அந்த திசை நோக்கி படுத்து உறங்கும் பழக்கத்தினை நம்பிக்கையோடு பின்பற்றுகின்றனர்.

**வளையல் அணியும் வழக்கம்**

வளைகாப்பு என்ற சடங்கு முறையிலும் இவ்விணத்தார் சில பழக்கவழக்கங்களை பின்பற்றுகின்றனர் கருவுற்ற பெண்களுக்கு மூன்று மாதத்தின் தொடக்கத்திலிருந்து கண்ணாடி வளையல்கள் அணியும் வழக்கம் பொதுவாக பழக்கமாகவே காணப்படுகிறது. பிற இன மக்கள் மட்டும் இன்றி கொங்கு வேளாளர் இனத்தவர்களும் கருவுற்ற பெண்ணிற்கு வளையல்களை அணிவித்தனர் கொங்கு நாட்டு பகுதியை சேர்ந்த மக்கள் அன்றைய காலகட்டத்தில் பெரும்பாலும் சங்கு வளையல்களை மட்டுமே அணிவிக்கும் வழக்கத்தினை கொண்டிருந்தனர். கொங்கு வேளாளர் இனமக்களும் பண்டமாற்று முறையாக கிடைக்கப் பெற்ற சங்குகளை வைத்து கைவினைப் பொருட்களாக உருவாக்கி அதனை வளையலாக அணியும் வழக்கத்தினை கொண்டிருந்ந்தனர். கடற்கரை நாடுகளிலிருந்து கொங்கு நாட்டிற்கு சங்கு வலையல்கள் கொண்டு வரப்பட்டன. வடநாட்டு மக்களின் வாணிகத்தின் உள்ளீடுகளும் அதிகம் கொங்கு நாட்டு மக்களிடையே காணப்பட்டது. **“கொங்கு நாட்டு மகளிரும் அந்தக் காலத்தில் சங்கு வளையல்களை அணிந்திருந்தனர்.” (கொங்கு நாட்டு வரலாறு, ப. 116)** என்ற சான்றுகளின் படி கொங்கு நாட்டின் கொங்கு வேளாளர்களும் சங்கு வளையல்களை அணிந்திருந்தனர். கால வளர்ச்சியாலும் அறிவியல் காரணத்தினாலும் நாளடைவில் கொங்கு வேளாளர்கள் மட்டுமின்றி கொங்கு நாட்டு மக்கள் அனைவரும் கண்ணாடி வளையல் அணியும் வழக்கத்தினை பின்பற்றினர். **“கொங்கு நாட்டில் பிற்காலத்தில் கண்ணாடி வளையல்கள் அணியும் வழக்கம் ஏற்பட்டு விட்டது.” (கொங்கு நாட்டு வரலாறு,.ப. 116)** இந்நூலின்

ஆசிரியர் கருத்தினை ஒப்பிட்டு பார்ப்பதன் மூலம் கால வளர்ச்சிக்கேற்ப பழக்க வழக்கற்களில் மாற்றங்கள் நடை பெறுகின்றன என்பதை உணர முடிகிறது. கண்ணாடி வளையலுக்கு அணிவதால் தாயின் செயல்களை சத்தத்தால் கருவில் உள்ள குழந்தை அறிய முடிகிறது என்பதை இவ்வினத்தாரின் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கமாகும்.

**காது குத்தும் வழக்கம்**

பிறந்த குழந்தை ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் காது குத்தும் வழக்கமானது அனைத்து இனத்தவர்களும் கடைபிடிக்கப்படும் ஒன்றாகும் மரபு வழியாக கருவில் குழந்தைக்கு ஏதேனும் பாதிப்போ அல்லது குறையவோ ஏற்பட்டால் அதனை போக்குவதற்காக அறிவியல் ரீதியாக முன்னோர்கள் பின்பற்றப்படும் பழக்கவழக்கங்களில் இவ்வழக்கமும் ஒன்றாகும். வழி வழியாக தாய் மாமன் மடியில் அமர வைத்து குழந்தைக்கு மொட்டை இடுவது வழக்கமாகும். பச்சை குத்துவது, தீமிதிப்பது, உடல் உறுப்பை சிதைத்து கொள்வது போன்ற வழக்கங்கள் போலவே காது குத்தலும் அறிவியல் மற்றும் அடிப்படை காரணங்களால் இயற்றப்பட்டவை ஆகும். குழந்தையின் தாய் மாமனுக்கு திருமணம் நடைபெற்றிருந்தால் தாய் மாமனின் மனைவியான அத்தை குழந்தைக்கு காதுகுத்தி அடுத்த நிமிடமே கருப்பட்டி ஒரு துண்டினை குழந்தைக்கு தருவது வழக்கமாகும். முதன் முதலில் குழந்தையின் அத்தை இனிப்புகளை வழங்கிய பின்பு வாழைப்பழம் மிட்டாய் போன்ற பண்டங்களை உண்பதற்கு தருவது வேண்டும் என்பதை வழக்கமாகும். திருப்பூர் மாவட்டத்தின் கொங்கு வேளாளர் இறந்தார் ஆண் பிள்ளைக்கு ஏழு முட்டையும் பெண் பிள்ளைக்கு மூன்று முட்டை என்ற ஒற்றைப்படையின் அளவில் மொட்டை அடிப்பது வழக்கமாகும்.

**குழந்தை பிறந்த பின்**

குழந்தை பிறந்த பின் கொங்கு வேளாளர் அவர் கைநிறைய நெல்லினை கொண்டு பிறந்த குழந்தையின் கையினை முதன் முதலில் நெற்குவியலால் பதிய செய்வது வழக்கமாகும் மண் தொடாத பாதமும் கைகளும் முதன் முதலில் தாங்கள் தெய்வமாக வணங்கும் தங்களின் தொழிலின் முதன்மை பொருளான நெல்லின் மீது படுவதால் நாடும் வீடும் வளம்பெறும் என்பதால் இவ்வினத்தார் இவ்வழக்கத்தினை கடைபிடிக்கின்றனர். குழந்தை பிறந்த பிறகு முதன் முதலில் வினாத்தாள் என்னை தேய்த்து நாவிதர் இனத்தை சேர்ந்த பெண்களால் குளிக்க வைக்கின்றனர் மருத்துவ முறைகள் அறிந்த நாவிதர் இனத்தவர் இக்குழந்தையை முதன் முதலில் குளிக்க வைப்பதால் குழந்தைக்கு உடல் ரீதியாக எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என்பதை கொங்கு வேளாளர் இதன் மக்களின் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கமாகும்.

**பூப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள்**

பெண் குழந்தைகளுக்கு பூப்படைதல் என்பது வாழ்வின் முக்கியமான தருணம் ஆகும் ஒரு தலைமுறை தலை துவங்க வேண்டுமானால் ஒரு பெண் குழந்தை கட்டாயமாக பூப்படைந்திருத்தல் வேண்டும் என்பது சமுதாயத்தின் கருத்தாக கருதப்படுகிறது. **“பெண்ணின் கருப்பைச் சளிப் படலத்திலிருந்து சளியும் திட்டுறு நிரமங்கலம் கொண்ட உறைய இயலாத குருதி வெளியேறுவதையே பூப்பு என்பர்.” (முனைவர் ம. அரும்பு, ப. 1043)** கொங்கு வேளாளர் இனத்தவரும் பிற இனத்தாரை போல பூப்படைந்த பெண்ணிற்கு தாய்மாமன் சீர் முதன்மை சீராக செய்யப்படுவது வழக்கமாகும். கொங்கு வேளாளர் இத்தினத்தில் பூப்படைந்த பெண்ணை தங்களது இனத்தின்

பங்காளிகள் அனைவரிடமும் ஒரு படி நெல்லினை அப்பெண் தனது முந்தானையில் மடியேந்தி பெற வேண்டும் என்பது வழக்கமாகும் பூப்படைந்த பெண்ணின் வாழ்வு நெற்கதிர்களைப் போல செழித்து வளர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இவ்வழக்கமானது இன்றும் திருப்பூர் மாவட்ட கொங்கு வேளாளர் இன மக்களிடையே காணமுடிகிறது.

**திருமணம் சார்ந்த பழக்கவழக்கங்கள்**

வேளாண்மை நிலத்தில் பூட்டிய எருதுகள் போல ஆணும் பெண்ணும் இணைபிரியாமல் இல்லற வாழ்வினை இல்லறமாக நடத்திட வேண்டும்

**அன்பும் அறனும் அருளால் குடிபிறப்பும்**
**நின்று விருந்தோம்பி நீணிலத்தில் - மன்னுந்தன்**
**இச்செல்வம் பெற்ற இணைவாழ்க்கை வாழ்ந்தபுகழ்**
**பல்செல்வம் இல்லறம்போற்று (பண்பாட்டியல் வெண்பா, ப. 94)**

கொங்கு வேளாளர் இன மக்களின் திருமணம் சார்ந்த கொள்கையாகும்.

**முகூர்த்தங்கால் நடுதல்**

மரத்தினை கொண்டு திருமணம் நடைபெறுவதற்கு முதல் நிகழ்வாக இதனை நடுகின்றனர் கல்லான உருவ வடிவ வழிபாடானது இம்மரத்தின் நிழலில் நடைபெறுகிறது பால்வடியும் வாழமரம் என்று அழைக்கப்படும் இம்மரமானது வெப்பத்தால் வரும் துர்நாற்றம் மற்றும் உடலில் ஏற்படும் நுன்கிருமிகளை அண்ட விடாது திருமணத்திற்கு வருவோர்களால் மணமக்களுக்கு ஏதேனும் தொற்றுகள் ஏற்படக் கூடாது என்ற அறிவியல் அடிப்படை காரணத்தால் இவ்வினத்தை சார்ந்த முன்னோர்கள் வழக்கத்தினை இன்று வரை பின்பற்றுகின்றனர். பார்த்து திருமணம் ஆனது நடைபெறும், கொங்கு வேளாளர் திருமணமானது,

**பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறத்தகாம வாயில் நிறைய அருளே,**
**உணர்வோடு திருவென முறையறக் கிளந்த**
**ஒப்பினதுவகையே (தொல். மெய்., நூ. 25)**

தொல்காப்பியரின் கூற்றுப்படி பத்து வகை பொருத்தமும் பார்த்து மனம் முடிகின்றனர். இவர்களது அறுபது குளத்தின் ஒரே குலத்திற்கு எடுக்காமல் வேறு வேறு குலம் மாற்றி ஆண் பெண் எடுத்து திருமணம் முடிப்பதை இவ்வினத்தாரின் வழக்கமாகும்.

திருமணத்திற்காக அணிகலன்களான செம்பும் தங்கமும் கலந்து அணிகலன்கள் செய்யப்படுகின்றன. தங்க நகைகள் அழகுதான் என்றாலும் கூட அது உடலோடு ஒட்டி அணிவதால் உடலில் ஏற்படும் வலிப்பு சூலை போன்ற நோய்கள் வராமல் தடுக்கின்றன நகைகள் அணிவதால் நோய்கள் வரும் வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. இரும்பு செம்பு வெள்ளி உலோகங்களால் காப்புகள் செய்து குழந்தைகளுக்கு அணிவிப்பதால் குழந்தைகளுக்கும் நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன செம்பு வெள்ளி கலந்த அணிகலன்கள் எண்களின் உடல் நலத்தையும் மனவளத்தையும் தருகின்றனர் மங்களத்தின் சூத்திரம் என்று அழைக்கப்படும் மாங்கல்யமும் பெண்களின் அணிகலன்களில் முதன்மை வாய்ந்தது ஒன்றாகும் சுமங்கலிய வாழ சக்தியும் சிவமும் இணைந்த பெரும் காப்பாக உள்ளதால் இவினத்தார் அன்றைய காலகட்டத்தில் கொங்கு வேளாளர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் காது பொன் கொப்பு என்ற அணிகலனை அணியும் வழக்கத்தினை கொண்டிருந்தனர்.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

மூளையின் முக்கிய நரம்புகளின் தூண்டல் காதில் உள்ள நரம்பின் கிளையாக தொடர்பு கொண்டிருப்பதால் காதில் அணிகலன்களை பெண்கள் அணிந்திருந்தனர் சிலம்பு கொலுசு என்று அழைக்கப்படும் அணிகலனை உடலின் திசுக்கள் தூண்டப்படுவதற்காக இவ்வினத்தார் கொலுசு அணியும் வழக்கத்தினை கொண்டிருந்தனர.; கொலுசினை போலவே திருமணத்தின் போது கால் விரல்களின் மெட்டி அணியும் வழக்கத்தினை இவ்வினத்தார் கொண்டிருந்தனர். அறிவியல் சார்ந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மெட்டி அணிவதால் கால் விரலில் உள்ள நரம்புகள் மெட்டியின் அழுத்தத்தால் உள்ளத்தை சனலம் இல்லாமல் வைக்கிறது என்பதை இவ்வினத்தார் நம்பிக்கை கொள்கின்றனர்.

**திருமணத்திற்கு முன் விரத நாள்**

கொங்கு வேளாளர் இனத்தாரின் ஒவ்வொரு விழாக்களின் துவக்கம்; விருந்தில்தான் துவங்குகிறது. மணமக்களின் உறவினர்கள் திருவார்க்கும் ஊராருக்கும் நண்பர்களுக்கும் இவ் விருந்தினை அளிக்கின்றனர் மணமக்களின் பெற்றோர்கள் தவிர பங்காளி முறை சேர்ந்தவர்கள் தான் இவ்வினத்து விருந்தினை அளிக்க வேண்டும் என்ற வழக்கம் தினத்தாரிடம் காணப்படுகிறது இவ்விதிற்கு தேவையான அரிசி பருப்பு, புலி எண்ணெய் காய்கறிகள் தேங்காய் பழம் நிலை வெற்றிலை என அனைத்து பொருட்களையும் அனைத்து உறவினர்களும் அவரவர் வீட்டில் இருந்து கொண்டு வருவர். விருந்தின் நாளன்று காலை மணமக்களை எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டி புதிய ஆடைகளை அணிவிப்பர் உறவினர்களில் மாமன் வீட்டார் விருந்து மிகவும் சிறப்பு வாய்ந்த விருந்தாக கருதப்படுகிறது இவ் விருந்தில் முதலில் காரவடையும் உளுந்து வடையும் தவறாது இடம் பெற்றிருக்கும் பண்டமாகும். திருமண மணமக்கள் நீராடி புத்தாடை அணிந்து விருந்து உண்ட பின்னே எல்லோருக்கும் விருந்திடுவார்கள் கொங்கு வேளாளர் இனத்தார் நாவிதன் தொட்டி வண்ணான் ஆகிய இன தாருக்கு விருந்திடுவது மட்டுமின்றி அவர்களது வீட்டிற்க்கே விருந்து உணவினை அனுப்பி வைக்கும் வழக்கத்தினை பின்பற்றி இருக்கின்றனர் இதனை சோறாக்கி போடுதல் என்று அழைக்கின்றனர். மொய் செய்யும் உறவினர்களுக்கு மணவீட்டார் திருப்பி அவரவர் வீட்டு திருமணத்தின் போது கடனாக திருப்பி செய்து விடுவார், குறிய எதிர்ப்பை மீறாது என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப நன்றி செய்தவருக்கு மீண்டும் நன்றி செய்ததால் சிறப்பாகும் நன்றி அறிதல் என்ற வழக்கு திணை இவ்வினத்தால் கடைபிடிக்கின்றனர் என அறிய முடிகிறது. அன்று முதல் இன்று வரை வினாத்தார் திருமணத்திற்கு முதல் நாள் விருந்து போடும் பழக்கத்தினை கடைபிடித்து வருகின்றனர்.

**நிறை நாழியும் கரக பானையும்**

நூல் சுற்றிய இரட்டைக் கதிர் பதித்த இரும்பு வட்ட படியில் நெல்லினை நிறைத்து மனவறையில் வைப்பார்கள் இவ்வழக்கத்தினை நிறை நாழி சுற்றும் வழக்கம் என்பர். கொங்கு வேளாளர் இன தவறு செய்கின்ற ஒவ்வொரு செயல்களிலும் அருமைகார முறையை சேர்ந்த பெண்ணும் எழுதுங்கள் சீர் செய்த பெண்ணும் இம்முறையை செய்வதற்கு தகுதியானவர்களாக இவ்வழக்கத்தில் பயன்படுத்தப்படும் நெல்லும் நாளும் இனத்தாரின் முதன்மை பொருளாக கருதப்படுகிறது.

> **ஏறுதொழிலான நெல்லும் நெசவு தொழிலாளர் நூலும் அதற்கு துணையான இரும்பும் கொங்கு வேளாளர் குலத்தின் குடி பாட்டு சின்னங்கள் ஆகும். (கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும், ப. 137)**

என்ற களஆய்வாளரின் வரிகளின் மூலம் கொங்கு வேளாளர் இனமக்களுக்கு குடி சின்னம் ஒன்று இருந்தது என்பதை ஒப்பிட்டு கூறுகையில் கள ஆய்வில் சேகரித்த தகவல்கள் உண்மை என அறிய முடிகிறது. நிறை நாழிகையில் மஞ்சளும் நெல்லும் மங்களகரமாக நிறைந்திருப்பது போல மணமக்களின் வாழ்வும் முழுமையாக செல்வ வளத்தால் நிறைந்திருத்தல் வேண்டும் என்பதற்காக இவ்வளக்கமானது கடைபிடிக்கப்படுகிறது இரும்பில் நூல் சுற்றும் வழக்கமானது இரும்பு போன்ற மணமக்களை நூலிடையால் கொண்ட மணமகள் என்றும் நெருக்கமாக சுற்றி பிணைந்து இருக்க வேண்டும் என்பதை கருத்தாகும். இந்த நிறை நாழியோடு சுண்ணாம்பும் காவியும் கொண்டு அலங்கரிக்கப்பட்ட பூரண கும்பம் என்று அழைக்கப்படும் கரகப் பானையில் நவதானிய முளைப்பாரி போட்டு செழுமையாக வளர்த்திருப்பார் நவதானிய அடகிய கரகப் பானையினை வைத்திருப்பதால் குடும்பம் தலை தூங்கி கிரக தோஷங்கள் அகன்று விடும் நம் என்ற நம்பிக்கை சார்ந்த வழக்கமே இவ்வினத்தாரின் பின்பற்றுகின்றனர் கொங்கு வேளாளர்கள் பிற இனத்தவர்களை போல திருமணம் மேற்கொண்டாலும் அதில் சில மாறுபட்ட தங்களது இனத்தின் அடையாளமாக திகழும் பழக்க வழக்கங்களை இன்றளவும் பின்பற்றி வருகின்றனர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

**இறப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள்**

இறந்தவர் பிறத்தலும் பிறந்தவர் இறந்தலும் உலக இயற்கையாக இருப்பினும் கொங்கு வேளாளர் இனத்தவர்கள் எண்ணில இறப்பிற்கும் பெரிதும் வருந்துபவர்களாக கொங்கு வேளாளர் மட்டுமின்றி இறப்பு என்பது பிற இனமாக இருப்பினும் மிகுந்த துயரத்தை ஏற்படுத்துவதான ஒரு நிலையாகும் இறப்பிலும் ஒவ்வொரு இனத்தாரும் தான் வாழ்ந்து முடித்த வாழ்வின் பதிவுகளை தன் இனத்தின் வழியில் பழக்கவழக்கங்களின் வழியாக பதிவு செய்கின்றனர்.

> **மனிதன் பிறக்கும்போது இறப்பு நிச்சயிக்கப்பட்டுவிடும் என்பது இயற்கை மனிதன் மூப்பு காரணமாகவும், நோய் காரணமாகவும் விபத்து போன்ற பல்வேறு காரணங்களால் மரணம் நிகழ்கின்றது மரணம் நிகழப்போவதை சில சமிஞ்சைகள் மூலம் அறிய இயலும் என்பதில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். (சி. பவித்ரா, ப. 189)**

இவ்வினத்தார் இன்றைய காலகட்டத்தின் செய்தியை பரிமாறும் தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காரணத்தால் வீடு வீடாக சென்று செய்தியினை அறிவிக்கும் முறை கடைபிடிக்கப்பட்டது. இறப்பு செய்தியினை தெரிவிக்கவும் இவ்வினத்தார் அன்றைய காலகட்டத்தில் இம்முறையினையே கடைபிடித்தனர் ஒரு வீட்டில் இறப்பு ஏற்பட்டு விட்டார் ஆட்கள் மூலம் அறிவிப்பர் தோட்டி முதலானவர்களை அழைத்து ஊர் ஊராக செய்தியை அறிவித்து வர அனுப்புவார்கள் தோட்டி என்று அழைக்கப்படும் இவர்களுக்கு செய்திகளை கூறும் ஒவ்வொரு வீடுகளிலும் ஒரு படி அரிசி அல்லது பணம் கொடுப்பார்கள் இறப்பு நடந்த வீட்டாரும் இழவு செய்திகளை கூறியவர்களுக்கு பணம் கொடுப்பது வழக்கமாகும். **செத்துக் கொடுத்தான் சீதக்காதி** என்ற பழமொழிக்கு ஏற்ப பிறரது இறப்பிலும் ஏழையர் சிலர் வாழ வேண்டும் என்ற பொருளும் பணமும் தருவதற்காக இன்றும் கிராமப்புறத்தில் வழக்கமானது பின்பற்றப்பட்டு வருகிறது.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

**சாப்பறை கொட்டும் வழக்கம்**

கொங்கு வேளாளர்கள் இறந்தோருக்கு சாப்பறை கொட்டுவது வழக்கமாகும். கொங்கு வேளாளர் இனத்தை சேர்ந்தவர் இறந்தால் ஊர் கொங்கு பறையனுக்கு தான் முதலில் செய்தி சொல்லி அனுப்புதல் வேண்டும் பறை கொட்டுவதற்கு அந்த ஊர் பறையனுக்கு தான் உரிமையுண்டு என்ற கொள்கையினை வினாத்தாள் கொண்டுள்ளனர் இருப்பதால் பண்டிகை திருவிழா நாட்களில் வீடுகளில் கோரும் பலகாரங்களும் பெற்று செல்கின்றனர். இறந்த வீட்டில் தேங்காய் உடைத்து சாமி கும்பிட்டவுடன் பறையன் வந்து சாப்பரி கொட்டுவான் இறந்தவர் வீட்டில் வாழ்த்துப்பாடும் வழக்கத்தினை வினதால் பின்பற்றுகின்றனர். ஊரின் நடுவே நின்று பறையடித்த பின் இறந்தவரின் பெருமை கூடி ஆடிப்பாடி பறையடிப்பது வழக்கமாகும் இறப்பு வீட்டாரை சேர்ந்த உறவினர்களிடம் வாழ்த்து பணமும் பெற்று கொள்வது வழக்கமாகும் இறப்பு வீட்டாரிடம் வேட்டி அல்லது துண்டினை வாங்கி பந்தலில் விரிப்பு போட்டுக் கொள்வான். நிலவிற்கு வந்து போகும் உற்றார் உறவினர்களும் அந்த விரிப்பில் பணம் போடுவார்கள், பணம் போடுபவர்களின் பெயர் கூறியும் வாழ்த்து கூறுவர். முறையை சேர்ந்தவர்களும் கோடி கொண்டு வரும்போது இந்தந்த உறவுகள் கோடி கொண்டு வருகின்றனர் என கூவி சாப்பிடட்டுவது பறையரின் வழக்கமாகும் கொங்கு வேளாளர் இனத்தவரின் இறப்பின் செய்தியை அது மட்டுமின்றி ஊரு பறையேன் என்ற உரிமையை விட்டுக் கொடுக்காமல் தனது கடமைகளை நிறைவேற்றுவதில் கொங்கு பற எண் பெரும் பங்கு வகுக்கின்றார்.

**செலவு கொடுத்தல்**

இறந்தபின் எரிக்கும் வழக்கத்தை உடைய இவ்வினத்தார் எரித்த பின் செலவு கொடுத்தல் எனும் வழக்கத்தினை பின்பற்றுகின்றனர் சுடுகாட்டின் மரத்தடி மேடையில் வண்ணான் துணி விரிப்பில் ஊர் அருமை காரர்கள் அல்லது பெரியவர்கள் அமர்வார்கள் இறப்பு வீட்டாரும் முற்றார உறவினரும் சூழ்ந்து இருப்பார்கள் செலவு கொடுத்தால் ஊரார் முன் நடைபெறும் பறை கொட்டியவன் மாலை கொண்டவன் சங்கு ஊதியவன் சுடுகாட்டு உரிமை தொட்டி வண்ணா நாவிதன் தெரு சுத்தம் செய்பவர்கள் என அனைவரும் பணம் பெறுவார்கள் சிலருக்கு தங்கள் வசதிக்கேற்ப அதிகப்படியாகவும் கொடுப்பார்கள் அழைப்பு செய்ய செல்வதற்காக சென்ற அனைவரும் பணம் பெறுவார்கள். இறப்பாக இருப்பினும் அனைத்து இன தவறும் தங்களை நிகழ்வில் பங்கு கொள்ளல் வேண்டும் எனவும் ஊரார் முன்பே உழைப்பிற்கு இவர்களுக்கு ஊதியம் தருதலும் வினத்தாரின் இன்று தொட்டை வழக்கமாகும். இறந்த வீட்டாரிடம் பணம் வேண்டும் என கேட்டு பெற மாட்டார் எனவே சுடுகாட்டிலே காரியங்களோடு காரியமாக பணத்தை இறப்பு வீட்டாரை தருவது விண்ணத்தாரையும் வழக்கமாக கடைபிடிக்கப்படுகிறது.

**பஞ்சு கொடுத்தல்**

கணவனை இழந்த பெண்ணிற்கு அன்று இரவே வெள்ளாடு கொடுப்பது வழக்கமாகும். கிழக்கு புறமாக முக்காலியில் பெண்ணை அமர்த்தி உறவு பெண்கள் அப்பெண்ணை கட்டி அணைத்து அழுவார்கள் கணவனை இழந்த பெண்ணின் உடன் பிறந்த சகோதரன் உறவினை சேர்ந்தவரின் கையால் அப்பெண்ணின் கையில் வெண்ணிற பஞ்சனை தருவது வழக்கமாகும். அதனை வாங்கிக் கொண்டு கதறி அழுவாள்.

> **திருமணம் முடிந்த பிறகு பெண்கள் கணவனுக்காகவும் தன் பிள்ளைகளுக்காகவும் கணவனின் குடும்பத்திற்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு குடும்பத்தை கட்டி காக்கும் குலவிளக்காக வாழும் அதே பெண் கணவனை இழக்கும் போது விதவை அமங்கலி ஆகிறாள் கைமை நோன்பு மிகவும் துன்பமானது. (சே. இராஜேஸ்வரி, ப. 1001)**

கணவனை இழந்த பெண்கள் குடும்ப சுமையை தானே ஏற்று நடத்த வேண்டும் என்றும், காதல் உணர்வுகள் இன்றி தன் துணையினை மட்டுமே மனதில் வைத்து வாழ வேண்டும் என்ற நிலையினை அன்றைய காலத்திய கொங்கு வேளாளர் பெண்கள் கொண்டிருந்தனர். கைம்மை நிலை மட்டுமில்லாது ஆண் துணையின்றி பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக சில கைத்தொழில்களையும் கற்றிருந்தனர். இதனை கள ஆய்வாளரான ப.சின்னசாமி கவுண்டர் என்பவர் தமது கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும், பண்பாடும் என்ற புத்தகத்தில்,

> **கைராட்டையால் நூல் நூற்று பிறர் உழைப்பில் வாழாமல் தன் உழைப்பில் தன் கணவனுக்கு அடுத்த நிலையில் குடும்பத்தை காத்து வாழ்வேன் என தன்னம்பிக்கையை பெண்ணிற்கு உணர்த்துவதற்காக பின்பற்றுகின்றனர் இதனை பருத்திப் பெண்டிர் புறம் (கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும், 129: 7, ப. 257)**

என்ற களஆய்வு அறிஞரின் கருத்தானது கைம்மை பெண்களின் நிலைக் குறித்து விளக்கிக் கூறும் ஒப்பிடாக அமைந்துள்ளது. **“நெஞ்சு அமர் காதல் அழுத கண்ணீர் என்புபடு கடலை வெண்ணீறு அவிப்ப... (கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும், ப. 257)** என்ற அடிகளும் கணவனை இழந்த பெண்ணின் நிலையினை உணர்த்துகின்றது இவ்வழக்கமானது கணவனை இழந்த கைமை பெண்கள் கடைபிடிக்கப்படும் உணவு கட்டுப்பாட்டினை இவ்வினத்து சேர்ந்த கைம்மை பெண்களும் கடைப்பிடித்தனர். கொங்கு வேளாளர் பெண்கள் கைமை நோன்பில் நெறி தவறாது இருந்தனர் என்பதை கள ஆய்வு செய்திகள் மூலமும், சில வரலாற்று கள ஆய்வாளர்கள் மூலமும் அறிய முடிகிறது.

**தொகுப்புரை**

குளிர்ந்த நீரில் நீராடி, ஆம்பல் கிழங்கு உணவையும் எள்ளு வேளை கீரை போன்ற உணவுகளையும் உண்டு சமூகத்தின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி கிடந்தன. கணவனை இழந்த பிறகு தனது வாழ்வின் பழக்க வழக்கங்கள் உணவு உடை என அனைத்திலும் சுதந்திரத்தை இழந்த இவ்வினத்து பெண்கள் இன்றைய காலகட்டத்தில் இல்லை என்றாலும் அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்திருந்தனர் என்பதை இவர்கள் வாழ்வியல் பழக்கவழக்கங்களின் மூலம் அறிய முடிகிறது உண்டி கொடுத்தோர் உயர் கொடுத்தோரே என்ற பல பழமொழிக்கேற்ப உணவு தரும் கடவுளாக விளங்கும் இவ்வினத்தார் பிறப்பு முதல் இறப்பு வரை தங்களது இனம் சார்ந்த மற்றும் தொழில் சார்ந்த அனைத்து பழக்க வழக்கங்களையும் இன்றளவும் மென்மேலும் மேம்படுத்தி வருகின்றனர் என்பதையே இக்கால ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

[1] அரும்பு, ம. “பச்சைமலை மலையாளி மக்களின் வாழ்வியல் சடங்குகள்.” *புதிய அவையம்*, தொகுதி 07, ஜீன் 2023, ப. 1043.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

[2] இராஜேஸ்வரி, கை.ப. "தொல்காப்பியம் கூறும் தொழில்கள்." *பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்*, தொகுதி 1, 2019, ப. 560.

[3] இராஜேஸ்வரி, சே. "நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல்கள் காட்டும் பெண்களின் அவல நிலை." *புதிய அவையம்*, தொகுதி 07, ஜீன் 2023, ப. 1001.

[4] துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. *புறநானூறு-பகுதி 1*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1947.

[5] சண்முகசுந்தரனார், சு. *நாட்டுப்புற இயல்*. கவ்யா பதிப்பகம், 1975.

[6] சின்னசாமி கவுண்டர், கவியருவி.தே.ப. *கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும்*. ஸ்ரீசரஸ்வதி தேவி பதிப்பகம், 2000.

[7] சுப்பிரமணியன், ச.வே. *தொல்காப்பியம் முழுவதும்*. மெய்யப்பன் பதிப்பகம், 2008.

[8] தேவநேயப் பாவாணர், ஞா. *திருக்குறள் முழுவதும்*. ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், 2000.

[9] நல்லாதனார். *திரிகடும்*. சுரதா பதிப்பகம், 2005.

[10] பவித்ரா, சி. "சூல் புதினம் எடுத்தியம்பும் நாட்டார் நம்பிக்கைகள்." *தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை*, தொகுதி 4, ஏப்ரல் 2023, ப. 189.

[11] வேங்கடசாமி, மயிலை சீனி. *கொங்க நாட்டு வரலாறு*. நியூ செஞ்சரி புக் ஹவுஸ், 2014.

[12] யசோதா, செ. "கொங்கு வேளாள பண்ணைக்குல மக்களின் நம்பிக்கைகள்." *நவீனத் தமிழாய்வு*, பகுதி-4, மார்ச் 2021, ப. 1095.

[13] வேலுசாமி, சு. நேர்முகப் பேட்டி. 20 மார்ச் 2025.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.